களரி கலை இலக்கியக் களம், கள்ளக்குறிச்சி - தமிழ்நாடு

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவெண்ணெய்நல்லூர் - தமிழ்நாடு

# தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் : தொல்மரபுப் பண்பாடும் பன்முகப் பரிமாணமும்

# தேசியக் கருத்தரங்கம் - 2025

## பாராட்டுச் சான்றிதழ்

திரு/திருமதி/ஆய்வாளர்/முனைவர்............நா. தீபாராணி....................................................

....................................................................................................................அவர்கள்

0.07.2025 அன்று நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில்.....தொல்காப்பிய கருப்பொருளும்..........................

....................கலிங்கத்துப்பரணியும்........................................................எனும் பொருண்மையில்

ஆய்வுக் கட்டுரையினை வாசித்தளித்தமையைப் பாராட்டிச் சான்றளிக்கப்படுகிறது.

[signature] 30.7.25

திரு.ச.வாசுதேவன்

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர், களரி கலை இலக்கியக் களம்

# தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் : தொல்மரபுப் பண்பாடும் பன்முகப் பரிமாணமும்

## தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை - 2025




பதிப்பாசிரியர்கள்:

ஆய்வாளர் ச.வாசுதேவன்

முனைவர் அ.முப்பாலிகை

# உள்ளடக்கம் (INTEX)


1. தொல்காப்பிய கருப்பொருளும் கலிங்கத்துப் பரணியும்
   முனைவர் நா.தீபாராணி....................................05
2. பரணி இலக்கியமும் மானுடமும்
   திருமதி து.மகாலட்சுமி....................................11
3. கலிங்கத்துப் பரணியில் சோழர்காலச் சமூகப் பண்பாடு
   செ.அய்யர்சாமி....................................13
4. கலிங்கத்துப் பரணி நூல் உணர்த்தும் செய்திகள்
   முனைவர் பெ.வனிதா....................................18
5. தமிழ்விடு தூதில் தலைவியின் காதல் வெளிப்பாடு
   திருமதி ப.அமுதா....................................20
6. அழகர் கிள்ளைவிடு தூது - பாட்டுடைத்தலைவன் மற்றும் தூதுப் பொருளின் சிறப்பு
   திருமதி மு.காயத்ரி....................................25
7. பணவிடு தூது சிற்றிலக்கியம் வழியாகக் காணலாகும் செய்திகள்
   முனைவர் அ.எபநேசர் அருள்ராஜன்....................................30
8. தூது இலக்கியம் பேசும் தொல்தமிழர் வாழ்வியலும் பண்பாட்டு நிலைகளும்
   திருமதி நீலாவதி நகுலேசப்பிள்ளை....................................36
9. முக்கூடற்பள்ளு பாடல்களில் வேளாண் செய்திகள்
   முனைவர் செ.கார்த்திகா....................................45
10. முக்கூடற்பள்ளு கூறும் வாழ்வியலில் தெய்வ வழிபாடுகளும் நம்பிக்கைகளும்
    முனைவர் கா.தம்பிரான்....................................52
11. முக்கூடற்பள்ளு பகுப்பாய்வு
    முனைவர் த.முத்துலட்சுமி....................................58
12. முக்கூடற்பள்ளுவில் தொன்மக் கூறுகளும் சடங்கு முறைகளும்
    முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா....................................62
13. பாவை காட்டும் பாவை
    சா.யோகப்பிரியா....................................66

## தொல்காப்பிய கருப்பொருளும் கலிங்கத்து பரணியும்

முனைவர் நா.தீபாராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் பல்கலைக்கழகம்
பல்லாவரம், சென்னை 117

### முன்னுரை

**கலிங்கத்துப்பரணி அறிமுகம் - பிரபந்த வகை**

'தொண்ணூற்றாறு' - பிரபந்தங்களில் பரணி இலக்கியமும் ஒன்று இவை சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது."தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் அடங்காத நொண்டி நாடகம், கப்பற்பாட்டு, வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, கோலாட்டப்பாடல், ஆனந்தக் களிப்பு, கிளிக்கண்ணி, விலாசம், புலம்பல், உந்தி பறத்தல், சாழல், தெள்ளேணம், வள்ளைப்பாட்டு, கவசம், ஒடப்பாட்டு, காதல், ஏற்றப்பாட்டு முதலான பல பிரபந்தங்களையும் காண்கின்றோம்." **(சுப்புரெட்டியார், ந.. 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி', செல்வி பதிப்பகம், முதற்பதிப்பு, மார்ச்சு-1957, ப.11.)**புறத்திணைகளுக்குரிய துறைகளை பாடுபொருண்மையாகக் கொண்டு எழுந்த இலக்கிய வகைகளையும் பாட்டியல் நூல்கள் குறிப்பிட்டுள்ளன. பல்பொருள் வஞ்சி, புறக்கோவை, மறக்களவஞ்சி, மறம், யானைத் தொழில், யானை வஞ்சி ஆகியன பட்டியலில் அடங்காத புறப்பொருண்மை தழுவிய இலக்கிய வகைகளின் பெயர்கள். இங்ஙனம் புறத்திணைகளையும், புறத்துறைகளையும் சார்ந்தனவாக ஐம்பது இலக்கிய வகைகள் அமைந்துள்ளன." (செயராமன், ந.வீ., 'சிற்றிலக்கியத் திறனாய்வு', இலக்கியப் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை, 1980, ப.21.)

(ii) **பரணியின் இலக்கணம்**

போர் முகத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிக் கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவதைப் 'பரணி' என்று வழங்குவர். "யானை யாயிரம் அமரிடை வென்ற மாணவ னுக்கு வகுப்பது பரணி"3**(இலக்கண விளக்கம்.-சூத்.-78.)**

(iii) **கலிங்கத்துப்பரணி**

"தோற்ற நாட்டுப் பெயரால் நூலை வழங்குவது மரபு ஆயிற்று. இங்கே தோற்ற நாடு கலிங்கம். ஆகவே நூல் கலிங்கத்துப்பரணி எனப்பட்டது." **(வரதராசன்,மு.. 'தமிழ் இலக்கிய வரலாறு', முதற்பதிப்பு-1972, புதுதில்லி 110001, ப.-158-159.)** கலிங்கத்துப்பரணி பதினான்கு (14) உறுப்புகளையும் ஐந்நூற்று தொண்ணூற்றி ஒன்பது (599) ஈரடிக்

கலித்தாழிசைகளையும் கொண்டுள்ளது. புறப்பொருள் தோ இந்நூலின் இலக்கணமாகும். "அளவடி முதலா வடியிரண்டாக பரணி யுரைக்கப் படுமே"5(இலக்கண விளக்கம் கலிங்கத்துப்பாணி தலைவனின் பெயரை வெளிப்படுத்தி இயற் இலக்கியமானாலும் அப் புற இலக்கியத்துக்குள்ளே ஓர் அக மரபாக கடைதிறப்பு பகுதி உள்ளது.

கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, அஞ்ஞவ மோகவதைப் பரணி, பாசவதைப்பரணி, இரணியவ காஞ்சவதைப்பரணி முதலியநூல் பாடுவதற்கு பாடுவோர் கெ என்னும் பாட்டின் உறுப்பாகிய ஈரடிக் கலித்தாழிசை என்ற மேற்கொள்வது வழக்கம். பரணி நூலில் கடவுள் வாழ்த்து, கா காடு, காளி, கோயில் முதலிய பல்வகைச் சிறப்புகளும், சுவைகளும் கொப்புளிக்கும்படி அமைக்கப்பெறும் இந்த வழக்கத்

**'தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை**
**மேவி அமரும் காளி கோயில்**
**கன்னியை ஏத்தல் அலகை விநோதம்**
**கனாநிலை நிமித்தம் பசியே ஓகை**
**பெருந்தேவி பீடம் அழகுற இருக்க**
**அமர்நிலை நிமித்தம் அவள்பதம் பழிச்சா**
**மன்னவன்வாகை மலையும் அலிவு**
**மரபினி துரைத்தல் மறக்களம் காண்டல்**
**செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்**
**பரவுதல் இன்ன வருவன பிறவும்**
**தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே'** (7.மேற்படி. -சூத்

சூத்திரப்படி கலிங்கத்துப்பரணியில் அகத்திணை மர காணப்படுகின்றன. கடைதிறப்பு அதிகாரத்தில்

(iv) **கடைதிறப்பு**

கடைதிறப்பு அதிகாரம் ஐம்பத்து மூன்று (53) கலித்தாழிசை கொண்டுள்ளது. 'கடை-கதவு' கடைதிறப்பு என்பது கதவைத் திறக்கு செய்தல் என்ற பொருளைத் தருகின்றது. அதாவது. வேந்த அவனுடைய சேனைத் தலைவனும் போர் காரணமாகத் தம் உரி மகளிரை விட்டுப் பிரிந்து செல்கின்றனர். இந்தப் பிரிவு நிலைக்கும் கால வரம்பு உண்டு. குறிப்பிட்ட கால எல்லை தீர்ந்ததும் பிரி சென்றவர்கள் திரும்பி வந்துவிட வேண்டும்.

**கலிங்கத்துப்பரணியில் கருப்பொருள்கள்**

பாடல்களில் மூன்று பொருள் அடிநிலையாய்- உயிர் நிலையாய் அமைந்து விளங்கும்.

**"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே"**
**(தொல்.பொருள்.அகத்.நூற்-3)**

என ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவதனால், முதல், கரு, உரி என்னும் மூன்று பொருளும் அகப்பாடல்களுக்கு அடிநிலையாய் வேண்டுவதன் இன்றியமையாமை புலப்படும்.

**"தெய்வம் உணாவே மா, மரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கரு என மொழி**
**(தொல்.பொருள்.அகத்.நூற்.-18.)**

முதற்பொருள் நிலத்தின் கண் உள்ள உயிரினங்களும் பிறவும் கருப்பொருள் என்று தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். கருப்பொருள் இன்னின்ன என்றுஇனி காண்போம்.

(அ) **தெய்வம்**

கொற்றவை (காளிதேவி).

(ஆ) **விலங்குகள்**

ஆ- (கலிங். 187), ஒட்டகம்- (கலிங். 142, 334, 433, 459), குதிரை-(கலிங். 253). குரங்கு- (கலிங்.96). சிங்கம்- (கலிங். 318), செந்நாய்-(கலிங்.83). நரி- (கலிங். 119), பகடு- (கலிங். 272), பன்றி- (கலிங். 164).புலி, மான்- (கலிங். 189), மேதி- (கலிங்.17). யானை- (கலிங் 491). வெள்ளாடு- (கலிங். 568).

(இ) **மரஞ், செடி, கொடிகள்**

ஈகை- (கலிங்.78), ஓமை- (கலிங்.76). கதலி- (கலிங்.295), கமுகு-(5.295), கள்ளி- (5.77), காரை- (4.76), கூகை-(கலிங். 78), சூரை- (கலிங்.76). துள்ளி- (கலிங்.77). தேறு- (கலிங். 78). நெல்லி- (கலிங்,77), பனை- (கலிங். 135), பாரை- (கலிங்.76), பாலை-(கலிங்.76), புன்கு- (கலிங்.78), முள்ளி- (கலிங்.77), வள்ளி- (கலிங்.77). வாகை- (கலிங்.78). வெள்ளில்- (கலிங்.77), வீரை- (கலிங்.76). வேய்-(கலிங்.76), வேல்- (கலிங். 77).

## முடிவுரை

யானைகளின் கொம்புகள் தங்கள் மார்புகளுக்கு... வீரர்கள் தம் மனைவியரோடு கூடும் காலத்தில் முத்து... தரித்த இளைய மகளிரின் முலைகள் தம் மார்புக்கு எதிர்... அந்தப் புணர்ச்சிக்கால இன்பமாக எண்ணி மகிழ்வோடு... நின்றனர்! இதுபோன்று கலிங்கத்துப்பரணியின் புறத்திணை... அகத்திணை நின்றுப் பொலிப்பதை காண முடிகின்றன. கலிங்க... அகத்திணையாகவும் புறத்திணைக்குள் அகத்... புறத்திணையாகவும் விளங்குகின்றது. இத்தகைய... தொல்காப்பிய அகத்திணை மரபுகளோடு நின்று கால... ஒன்றுபட்டும் மாறுபட்டும் வருவதை இக்கட்டுரை விளக்குகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. சுப்புரெட்டியார், ந., 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி', ... பதிப்பகம், முதற்பதிப்பு, மார்ச்சு-1957, ப.11.
2. செயராமன், ந.வீ., 'சிற்றிலக்கியத் திறனாய்வு', ... பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை, 1980, ப.21.
3. வரததாராசன்.மு., 'தமிழ் இலக்கிய வரலாறு', முதற்பதி... புதுதில்லி
4. கோபாலய்யர். 'கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும்', க... முதற்பதிப்பு-1923; ப. முகவுரை)
5. இராகவையங்கர், மு., 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி', மு... 1925